## தன்னை விளம்பரப்படுத்திக் கொள்ளவே பேசிவரும்

# ஆளுநர் விளம்பரப் பிரியர்! அதிகாரத்தை தவறுதலாகப் பயன்படுத்துகிறார்!

### ‘சன் நியூஸ்’ ‘கேள்விக் களம்’ விவாதத்தில் மூத்த பத்திரிகையாளர் டி.என்.ரகு விவாதம்!

**சென்னை, ஜீன் 9 -**

**சன் நியூஸ் தொலைக்காட்சி ‘கேள்வி களம்’ பகுதியில் ஆளுநரின் அடுத்தடுத்த சர்ச்சை பேச்சு அறியாமையா அரசியலா? என்ற தலைப்பில் நெறியாளர் மு.குணசேகரனைக் கொண்டு நடைபெற்ற விவாதத்தில் மூத்த பத்திரிகையாளர் டி.என். ரகு விவாதம் வருமாறு:**


There is nothing called ‘culture of the state’ என்று ஆளுநர் ஆர்.என்.ரவி சொல்லி இருக்கிறார். இது ஒரு அபத்தமான ஸ்டேட்மென்ட், அவர் நம்முடைய எத்னிக் ஐடென்டியையே மறுதலிக்கிறார், அப்படி என்று ஒன்று இல்லை என்று சொல்கிறார். இந்தியா சுதந்திரம் அடைந்த உடனே உத்தரப் பிரதேசத்திற்கு என்ன பெயர் வைக்கலாம் என்று பேச்சு வந்தபோது அவங்க இந்துஸ்தான் என்று சொன்னார் களாம். நேரு, அது வேறு ஒரு நாடு என்று சொன்னார், அப்புறம் ஆரியவர்த் (ஆரிய வர்த்தம்) என்று சொன்னார்களாம், இவை எல்லாம் கிடையாது. வேறு சொல்லுங்கள் என்று சொன்ன உடன் இராமராஜ்யம் என்று சொன்னார்களாம். இராமராஜ்யமா, இசைபெயரில் ‘உத்தரப்பிரதேசம்’ இதுதான் உங்க மாநிலத்துக்குப் பெயர் என்று சொன்னார்.

அந்த மாதிரி மனநிலையில் இங்கே பேசியவர் குறிப்பிட்டுள்ளார். உத்தரப்பிரதேசம் என்றால் இந்தியா, அந்த நார்த் இந்தியா என்றால் அதுதான் இந்தியா, அப்படி என்கிற ஒரு நினைப்பில் ஆளுநர் ரவி பேசிக்கிட்டு இருக்கிறார். நம்முடைய எத்னிக் ஐடென்டி இருக்கின்றதே அதுதான் நம்முடைய வளர்ச்சிக்கு கேட்டலிஸ்ட் (ஊக்கி) (ப்ரைம் மூவர்) முக்கிய பங்கு வகிக்கிறது. இதனை (Stuff Nationalism) துணை தேசியம் என்று சொல்கிறோம், இது நம்முடைய வளர்ச்சிக்கு மிகப் பெரிய உந்து சக்தி. அது, பிரிவினைக்கான காரணம் கிடையாது.

இன்றைக்கு ஏன் ஆந்திரா, கர்நாடகம், கேரளா, தெலுங்கானா ஆகியற்றைவிட தமிழ்நாடு எல்லா வளர்ச்சி கூறுகளிலும் முன்னாடி இருக்கிறது? இன்பான்ட் மோர்ட்டாலிட்டி ரேட், டாக்டர் ரேஷியா, மெட்டர்னல் மோர்ட்டலிட்டி, பாலின விகிதம், ஹையர் எஜிகேசன் இவை எல்லாவற்றிலும் வட இந்தியாவை விட, இங்கே ஏன் அதிகமாக இருக்கிறது என்றால் இங்கே இருக்கின்றவர்களுக்கு உள்ள ப்ரைடு. எத்னிக் ப்ரைடு. (இனத்துக்கான பெருமை) முன்னேற வேண்டும் என்ற அந்த வெறி.

உதாரணத்திற்கு ஒன்றைச் சொல்கிறேன். நான் இப்போ ஒரு இந்தியன். அடுத்து தமிழன் என்று வைத்துக் கொள்ளுங்கள், சப் நேஷனலிஸ்ட் ஆக தமிழன். நான் ஆஸ்திரேலியாவிற்குப் போகிறேன். அங்கே எனக்கு சிட்டிசன்ஷிப் கிடைத்து விடுகிறது. அப்போ நான் என்ன ஆகிறேன், ஆஸ்திரேலியனாக ஆகி விடுகிறேன். ஆனால், நான் சாகின்ற வரைக்கும் தமிழனாகத்தான் இருப்பேன். அதே மாதிரி அமெரிக்கா போய் சிட்டிஷன்ஷிப் கிடைத்தால் நான் அமெரிக்கன். ஆனால் எத்னிக் ஆக எப்பவும் நான் தமிழன் தான். அந்த ஐடென்டியை எங்கே சென்றாலும் என்னால் மாத்திடவே முடியாது. சாகும் வரை மாத்திட முடியாது. அந்த ஐடென்டிட்டி கல்சர் தமிழனின் கலாச்சாரம் இருக்கிறது இல்லையா, அதனை அழிக்கவே முடியாது. அது எப்போதும் என்னுடனே இருக்கும். பிரேர்னா சிங் என்று ப்ரவுன் யுனிவர்சிட்டியில் இருக்கின்ற ஆய்வாளர் என்ன சொல்கிறார் என்றால், தென் இந்தியாவின் வளர்ச்சிக்கு முக்கியமான காரணமே அவர்களுடைய பிராந்திய உணர்வு, அது இந்திய ஒற்றுமைக்கு எதிரானது என்று நினைக்காதீங்க என்று அவங்க சொல்றாங்க.

இதனை தான் ஸ்டாடிஸ்டிக்சும் ப்ரூப் செய்கிறது. இந்த நான்கைந்து மாநிலங்கள் தான் எதிராக பேசுது என்று இங்கே பேசிய குமார் சொன்னார். ஏன் என்றால் இந்த நான்கைந்து மாநிலங்களில் தான் அவர்கள் ஆட்சியில் இல்லை.



டி.என். ரகு



மு.குணசேகரன்

இந்தி பேசும் மாநிலங்களில் பெரும்பாலும் அவர்கள் ஆட்சியில் இருப்பதனால், எல்லா மாநிலங்களுமே அந்த இந்தி பேசும் மாநிலங்கள் வைத்து இருக்கின்ற கொள்கை மாதிரி வைத்து இருக்க வேண்டும், யாரும் பேசக்கூடாது, நான் கேட்கிறேன் இன்றைக்கு குஜராத்தில் ஒரு கிரிக்கெட் பாலை எடுத்து போட்டார் ஒரு பையன் அப்படி என்று தட்டிக் கேட்ட ஒரு தலித் இளைஞருடைய கட்டை விரலை வெட்டி இருக்காங்க.

**ஆளுநர் ரவி ஒரு சூப்பர் சி.எம். ஆக முயற்சி செய்கிறார்!**

அங்குள்ள ஆளுநர் இது குறித்து பேசுவாரா? தலித் மக்களுக்கு எதிரா இந்தியாவிலயே அதிக குற்றம் நடப்பது உத்திரப் பிரதேசம். யோகி ஆதித்யநாத் அரசுக்கு எதிராக, அங்கே இருக்கின்ற ஆளுநர் பேசுவாரா? இப்போது ஆளுநர் ரவி ஒரு சூப்பர் சி.எம்.ஆக ஆவதற்கு முயற்சி செய்கிறார். காலையில் எழுந்த உடனே பிளேயிங் த டெவில்ஸ் அட்வகேட்ஸ் என்றபடி இந்த அரசுக்கு எதிராக பேசவேண்டும் என்பதையே அவருடைய குறிக்கோளாக வைத்து இருக்கிறார். ஏற்கனவே த்ராவிடியன் ஐடியாலஜிக்கு திராவிட மாடலுக்கு உயிரே கிடையாது, அது நீர்த்து போய் விட்டது என்று சொன்னார். இப்போது There is nothing called culture of the state என்று சொல்கிறார். நான் என்ன கேட்கிறேன், 2014 இல் தெலுங்கானா உதயமானது. தெலுங்கு பேசுகின்ற மக்கள் அனைவரும் பல ஆண்டுகாலமாக ஒன்றாக இருந்தார்கள். இத்தனை நாளா ஒரே மொழிவாரி மாநிலமாக இருந்த அவர்கள் ஏன் பிரிந்து போனார்கள்? ஆந்திராவில் உள்ளவர்களுக்குமே நிஜாம் ஐதராபாத்தில் உள்ளவர்களுக்குமே சிறிது கலாச்சாரம் வித்தியாசம் இருக்கிறது.

அவர்கள் பேசுகின்ற மொழியில், சாப்பிடுகின்ற உணவில் வித்தியாசம் இருக்கின்றது. அப்படி இருக்கின்ற நாடு தான் இந்தியா. இந்தியாவை எதற்கு துணை கண்டம் என்று சொல்கின்றோம். ஒரு கான்டினென்ட் அளவுக்கு இந்தியாவில் உள்ள மக்களிடையே வேறுபாடு இருக்கின்றது. அந்த வேறுபாடுதான், இந்தியா என்கிற ஒரு ஐடியாவிற்கு ஒரு முக்கியமான அடித்தளம். அதுவே இல்லை என்று ஆளுநர் ரவி மறுதலிக்கின்றார்.

**தமிழ்நாட்டு அரசுக்கு எதிராக பேச வேண்டும் என்றே பேசி வருகிறார்!**

சரி நாட்டை பற்றி இவர் இவ்வளவு சிந்திக்கிறாரே, இந்த மணிப்பூர் கலவரம் பற்றி, ஒடிசாவில் நடந்த ரயில் விபத்துக்கு யார் காரணம், மல்யுத்த வீரர்கள் போராட்டம் இது குறித்தெல்லாம் இவர் பேசுவதில்லை. இவர் தமிழ் நாட்டில் இருக்கின்ற அரசுக்கு எதிராக பேசவேண்டும். மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு அரசுக்கு எதிராக பேச வேண்டும் என்கின்ற குறிக்கோளாடு தான் தமிழ்நாடு ஆளுநர் செயல்பட்டுக்கிட்டு இருக்கிறார்.

இன்னொன்று பேசி இருக்கிறார் தமிழ்நாடு ஹையர் எஜிகேசன் சிஸ்டம் சுட்பீ அலைண்டு வித் மாடர்ன் வோர்ல்ட்’ஸ் நீட்ஸ் என்று சொல்லி இருக்கிறார். இது நியாயமானது. நீட்க்காக மாணவர்களை உருவாக்குகிறோம். படிப்பை அவர்கள் யோசிக்க வேண்டும். அப்படிபட்ட எண்ணம் உள்ள ஒரு ஆளுநர், குழந்தைத் திருமணத்தை ஆதரித்து பேசியது மாதிரி பேட்டி கொடுத்திருந்தார். சிதம்பரத்தில் குழந்தைத் திருமணம் நடந்ததா அரசு பிரச்சாரம் செய்தாங்க, ஆனால் அப்படி நடக்கவே இல்லை என்று பேசினார். இன்றைக்கு அது குறித்து வீடியோ எல்லாம் வெளிவந்து இருக்கு. பப்ளிக்கா சைல்டு. புரடெக்ஷன் மெம்பர் நடந்துதுன் சொல்லிட்டு, இப்ப நடக்கலைன்னு சொல்றார். இப்போது குழந்தைத் திருமணம் நடைபெற்ற வீடியோ வந்து இருக்கு. இதற்கு ஆளுநர் என்ன பதில் சொல்லப் போகிறார்.

அந்த வீடியோ எல்லாம் பொய் என்று மணிகண்டன் நீங்க சொல்றீங்களா (பா.ஜ.க. ஆதரவாளர் மணிகண்டனிடம் கேட்கிறார்) மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசுக்கு இருக்கிற அதிகாரம், உரிமையை விட ஒரு அப்பாயின்ட்டி’-க்கு எப்படி இருக்க முடியும்? உங்களுடைய தலைவி செல்வி ஜெயலலிதா இருந்திருந்தால், இந்த மாதிரி எல்லாம் ஆளுநர் பேசினால், அதனை அலவ் செய்வாரா? ஒரு கவர்னர் தன்னுடைய அதிகாரத்தை மீறி பேசலாமா, மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசை விட ஒரு அப்பாயின்டி-க்கு எப்படி பவர் வரும்?.

ஒவ்வொரு நாளும் ஆளுநர் விழா நடத்தி இருக்கிறார். கோவா பார்மேஷன் டே, தெலுங்கானா பார்மேஷன் டே, செங்கோல் டெல்லியில் கொடுக்கும் போது அதனை மார்க் செய்வதற்கு நம்முடைய வரிப் பணத்தில் இங்கே ஒரு விழா நடத்திக் கிட்டு இருக்கிறார். எளிமை என்றால் அந்த ராஜ்பவனை விட்டுட்டு எனக்கு கிரீன்வேஸ் ரோட்டில் ஒரு வீடு, சிம்பிள் வீடு கொடுங்க அப்படி என்று போக வேண்டியதுதானே.

நான் ஒன்று சொல்கிறேன். இவர் தமிழ்நாட்டைப் பற்றி பேசிக்கிட்டு இருக்கிறார். இவர் கோவா பார்மேஷன் டே கொண்டாடினார். சுதந்திரத்திற்காகப் போராடின ரானடே என்கிற ஒரு மனிதர் போர்ச்சுக்கலில் சிறை வைக்கப்பட்டு இருந்தார். போர்ச்சுக்கல் ஒரு கேத்தலிக் கண்ட்ரி (கத்தோலிக்க நாடு), போப் அவர்களை அண்ணா பார்க்கும் போது, அண்ணா அவர்கள் அவரிடத்தில் ஒரு கோரிக்கை வைத்தார். ரானடே அவர்களை நீங்கள் விடுவிக்க வேண்டும் என்று. அவர் கோவா சுதந்திரத்திற்காகப் போராடினார், அவர் போர்ச்சுக்கல் சிறையில் இருக்கிறார், அப்போது போர்ச்சுக்கல் ஆதிக்கத்தின் கீழ் கோவா இருந்தது. அண்ணா போப் அவர்களை பார்க்கும் போது, முதலில் அவர் கோரிக்கை வைத்தார். அதனை ஏற்று ரானடே அவர்களை விடுவித்தார்கள். போர்ச்சுக்கல் விடுவிச்சாங்க, அவர் தேங்க்ஸ் சொல்வதற்காக இந்தியா வரும் போது அண்ணா உயிரோடு இல்லை, அதற்கு என்ன காரணம் என்றால், திராவிடியன் ஐடியாலஜி என்பது டிவைசிவ் ஐடியாலஜி கிடையாது சமூக நீதியை உலகம் முழுவதும் பேசும் ஐடியாலிஜி. (பா.ஜ.க. ஆதரவாளர் அது பிரிவினை வாதம் என்று குறுக்கிடுகிறார்) அது பிரிவினை வாதம் இல்லை, பங்களாதேஷ் போரின் போது, அப்போது முதலமைச்சராக இருந்த கலைஞர் அதிக போர்க்கால நிதி வசூல் செய்து கொடுத்திருக்கிறார். அந்த பங்களாதேஷ் போருக்கு பிறகு இந்தியாவிலேயே அதிக போர்க்கால நிதி வசூல் செய்து கொடுத்த மாநிலம் தமிழ்நாடு. அப்போது கலைஞர் தலைமையில் இருந்தது தி.மு.க. அரசு, அவர்கள் மீது வேறு குறைகளை எல்லாம் சொல்வீங்க உங்களுக்கு பேசுவதற்கு உரிமை இருக்கிறது. அ.தி.மு.க,வைச் சேர்ந்தவர் பேசுவதற்கு உரிமை இருக்கு, ஆனால் ஆளுநர் பேசுவதற்கு உரிமை கிடையாது. அவர் ஒரு அரசியல் வாதி மாதிரி பேசுவதற்கு துளியும் அதிகாரம் கிடையாது. அவர் தன்னுடைய அதிகாரத்தை மிஸ்யூஸ் செய்கிறார்.

**இந்தியாவில் சிறந்து விளங்கும் தமிழ்நாடு கல்வி நிறுவனங்கள்!**

த்ராவிடியன் ஐடியாலஜி நீர்த்துப்போன ஒன்று என்ற அபத்தமாக வாதங்களை அடிக்கடி ஆளுநர் பேசிக் கொண்டு இருப்பதின் மூலம் தான் ஒரு விளம்பரப் பிரியர் என்று தன்னை முன்னிலை படுத்திக் கொண்டு இருக்கிறார் ஆளுநர். உண்மைக்குப் புறம்பாகவும் ஆளுநர் பேசிக் கொண்டிருக்கிறார். இன்றைக்கு நேஷனல் இன்ஸ்டிடியூசன் ரேங்கிங் பிரேம் வொர்க் தகவல்படி தேசியஅளவில் கல்வியில் அதன் தரம் குறித்து புள்ளி விவரம் வெளிவந்து இருக்கிறது.

அதில் இந்திய அளவில் 35 தமிழ்நாடு கல்வி நிறுவனங்கள் டாப் 100ல் இருக்கிறது. நம்முடைய எல்லா குறியீடுகளுமே அது மனித வளத்தில் இருந்து, சுகாதாரத்தில் இருந்து டெவலப்மெண்ட் இன்டஸ்ட்ரியில் மேலேதான் இருக்கிறோம்.

அப்படி இருக்கும் போது இது டெவலப் ஆகாத ஸ்டேட், இன்னும் நிறைய டெவலப்மெண்ட்க்கு வேலை இருக்கு, ஒண்ணுமே இது முன்னேற வில்லை அப்படி என்று ஒரு பிம்பத்தை ஆளுநர் இங்கே ஏற்படுத்திக்கிட்டு இருக்கிறார். இவரை கூடிய சீக்கிரம் உத்தரப் பிரதேசத்தினுடைய ஆளுநராக மாற்றம் செய்ய வேண்டும் பிரதமர் மோடி.

அங்கே போய் இவர் இதே மாதிரி தினமும் பேச வேண்டும்.

பார்ப்போம், அப்போது இவரால் அங்கே பத்து நாட்கள் கூட இருக்க முடியாது. தினமும் ஒரு விழா நடத்திக் கொண்டு, வெப்பம் அதிகமானால் ஊட்டி போய் துணை வேந்தர்கள் மாநாடு என்று வெளிமாநிலத்தில் இருந்து எல்லாம் அவர்களை அழைத்து வந்து கூட்டம் போடுவதற்கு நிச்சயமாக யோகி ஆதித்யநாத் இடம் கொடுக்க மாட்டார், தமிழ்நாட்டில் அவருக்கு ஓவராக இடம் கொடுத்து இருக்கிறோம் என்று நினைக்கிறேன். தமிழ்நாடு முதலமைச்சர் ஸ்டாலின் அவர்கள், நான் எப்போதும் பண்போடு நடக்கிறேன். ஆளுநருக்கு கொடுக்க வேண்டிய மரியாதையை கொடுத்துக் கொண்டு இருக்கிறேன் என்று சொல்லிக் கொண்டு இருக்கிறார். அது தேவையா? என்று தான் எனக்குத் தோன்றுகிறது.

ஏன்னா அந்த மரியாதையை அவர் அப்யூஸ்டு பண்ணிக்கிட்டு இருக்கிறார். ஆரம்பத்திலிருந்தே அவர் பேச்சுக்கள் ப்ரவோக் பண்ணுதாகவே இருக்கிறது. கான்ப்ரன்டேட்டிவ் அப்ரோச்லயே இருந்து வருகிறார். அந்த வகையில் செய்திகளில் இடம் பிடித்தவராக அவர் இருக்கிறார். அது அந்த பதவிக்கு தேவை கிடையாது. அந்த பதவியே தேவை கிடையாது.

இவ்வாறு மூத்த பத்திரிகையாளர் டி.என்.ரகு விவாதத்தில் பங்கேற்று உரையாற்றினார்.

---

### நெல்லையில் அரசு போக்குவரத்துக் கழகம் சார்பில் ஓய்வுபெற்ற அரசு போக்குவரத்து

# பணியாளர்கள் - வாரிசுதாரர்களுக்கு பணப்பலன்கள் வழங்கும் விழா!

### சட்டப்பேரவைத் தலைவர் மு.அப்பாவு தலைமையில் அமைச்சர் சா.சி.சிவசங்கர் வழங்கினார்!

நெல்லை, ஜுன் 9 -

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களின் ஆணைப்படி நெல்லையில் அரசு போக்குவரத்துக் கழகம் சார்பில் வண்ணார் பேட்டை புறவழிசாலை பணிமனையில் வைத்து ஓய்வு பெற்ற அரசு போக்குவரத்துக் கழக பணியாளர்கள், வாரிசுதாரர்களுக்கு பணப்பலன்கள் வழங்கும் விழா, பணியாளர்களுக்கான குளிரூட்டப்பட்ட ஓய்வு அறை மற்றும் பாவனையாக்கி திறப்பு விழா நிகழ்வு தமிழ்நாடு சட்டப்பேரவை தலைவர் மு.அப்பாவு தலைமையில் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் ஆர். எஸ்.ராஜகண்ணப்பன் முன்னிலையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் போக்குவரத்துத் துறை அமைச்சர் எஸ்.எஸ்.சிவசங்கர் பங்கேற்று 340 அரசு போக்குவரத்து பணியாளர்களுக்கு ரூபாய் 111.95 கோடி பணப்பலன்களை வழங்கினார்.

இந்நிகழ்வில் குளிரூட்டப்பட்ட ஓய்வறை மற்றும் பாவனையாக்கி திறந்து வைத்து சட்டப்பேரவை தலைவர் மு.அப்பாவு பேசியதாவது.

போக்குவரத்துத் துறை சார்ந்த ஊழியர்களுக்கு ஓய்வூதிய பணப்பலன்களை வழங்க முடியாத நிலையில் கடந்த ஆட்சி இருந்தது. ஆனால் முதலமைச்சர் மு க ஸ்டாலின் அவர்கள் இரண்டு ஆண்டுகளில் பல்வேறு நடவடிக்கைகள் எடுத்து 2023 வரையில் ஓய்வு பெற்றவர்களுக்கு கூட பணப்பலன்களை வழங்கி உள்ளது. போக்குவரத்துத் துறை மிகுந்த சிரமத்தில் இருந்தாலும் தொழிலாளர்கள் நலன் தான் முக்கியம் என முதலமைச்சர் நினைத்து செயல்பட்டு வருகிறார். உயிருக்கும், உடைமைக்கும் பாதுகாப்பு அளிப்பவர்களாக போக்குவரத்துத் துறையினர் உள்ளனர். ஆண்டுக்கு 2600 கோடி ரூபாய் போக்குவரத்து கழகத்திற்கு அரசால் வழங்கப்படுகிறது.

மகளிர்களுக்கான கட்டணமில்லா பயணத்திட்டமும் இதன் மூலம் செயல்படுத்தப்படுகிறது. பேருந்தில் 100 பேர் பயணித்தால் அதில் 70 பேர் பெண்கள் தான் உள்ளனர். முதலமைச்சரை ஒருநாள் சந்திக்கும்போது அவரது கண்கள் சிவந்து இருந்தது என்னவென்று கேட்டதற்கு போக்குவரத்து துறை மற்றும் மின்வாரியதுறை கணக்கை பார்த்தாலே இரவில் தூக்கம் வருவதில்லை என முதலமைச்சர் அவர்கள் என்னிடம் தெரிவித்தார்கள்.

இந்தத் துறையில் அமைச்சராக இருந்த மூன்று பேர் மேடையில் இருக்கின்றனர், ராஜகண்ணப்பன் மற்றும் சிவசங்கர் ஆகியோர் பேருந்துகள் வேண்டும் என்று கேட்டால் உடனுக்குடன் வழங்கி மக்களுக்கான திட்டங்களை செயல்படுத்தினர். தி.மு.க. ஆட்சியில் கொடுக்கப்பட்ட போனஸ் ரூபாய் 6000 ,ம் அ.தி.மு.க. ஆட்சியில் கேட்டதற்கு அப்போதைய முதல மைச்சர் ஜெயலலிதா உத்தர விட்ட நிலையில் அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டது.

ஆனால் இன்று போராட்டம் நடத்தாமலே அனைத்தையும் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வழங்கி வருகிறார்.

இவ்வாறு பேரவை தலைவர் மு.அப்பாவு பேசினார்.

அரசு போக்குவரத்துக் கழக பணியாளர்களின் வாரிசுதாரர்களுக்கு பணப் பலன்கள் வழங்கி பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் ஆர். எஸ்.ராஜகண்ணப்பன் பேசியதாவது.

பெண்களுக்கு கட்டணமில்லா பயணத் திட்டத்தால் ஆண்டுக்கு 2580 கோடி ரூபாய் போக்குவரத்திற்கு இழப்பு. பல சவால்களை சந்தித்து வரும் துறையாக போக்குவரத்து துறை உள்ளது. இந்த சவால்களை சமாளிக்க பல்வேறு முயற்சிகளை முதல மைச்சர் அவர்கள் எடுத்து வருகிறார். நிதி நிலையை பொறுத்தே இந்த பிரச்சினைகள் சரி செய்யப்படும். ஆனால் துறைகள் மக்களுக்கானதாக செயல்பட வேண்டும். குடிநீர், விவசாய பாசனம், போக்குவரத்து, மின்சாரம், சாலை, மருத்துவம் உள்ளிட்ட பிரச்சனைகள் கண்டிப்பாக அரசு சமாளிக்க வேண்டும். போக்குவரத்து துறையால் பெண்களுக்கான கட்டணமில்லா பேருந்து திட்டத்தை 1 கோடியே 40 லட்சங்கள் பேர் பயன்படுத்து கின்றனர். தொழிற்சங்கங்கள் போராடும் அவசியம் இல்லாத நிலை இந்த ஆட்சியில் உள்ளது. கடந்த ஆட்சியில் தொழிலாளர் நலனுக்காக எந்த பேச்சு வார்த்தையும் முறையாக நடைபெறவில்லை.

**எத்தனை காலங்கள் ஆனாலும் திராவிட இயக்கம் அழியாது!**

எத்தனை காலங்கள் ஆனாலும் திராவிட இயக்கங்கள் அழியாது. வரும் காலங்களில் இந்த இயக்கத்தை கழக இளைஞர் அணி செயலாளர் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் வழி நடத்துவார்.

இவ்வாறு அமைச்சர் ராஜகண்ணப்பன் பேசினார்.

அதன் பின்னர் அரசு போக்குவரத்துக் கழக ஓய்வு பெற்ற பணியாளர்களுக்கு பணப்பலன்கள் வழங்கி போக்குவரத்துத் துறை அமைச்சர் எஸ்.எஸ். சிவசங்கர் பேசியதாவது.

போக்குவரத்து துறை சிறப்பாக செயல்பட முதலமைச்சர் அவர்கள் பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறார்கள். நிதி ஒதுக்கீடும் கூடுதலாக ஒதுக்கப்பட்டுள்ளது. முதலில் 355 கோடி, அடுத்து 270 கோடி, இப்போது 1032 கோடி நிதியை முதல மைச்சர் ஒதுக்கி இருக்கிறார்கள். 1000ம் கோடிக்கு மேல் நிதியை ஒதுக்கிய ஒரே தலைவர் நம் முதலமைச்சர் மட்டும்தான். போக்குவரத்து துறையை திட்டமிட்டு சிறப்பாக நடத்திடவும் சென்னையில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பொற்களங்களால் இது போன்று பணப்பலன்கள் வழங்கப்பட்டது.

திருச்சியில் நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் கே.என்.நேரு தலைமையில் வழங்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து மதுரை, சேலத்தில் வழங்கப்பட்டது. இப்போது நெல்லையில் வழங்கப்படுகிறது. இது எல்லோருக்கும் தெரிய வேண்டும்.

**முதல்வர் கருணையோடு கவனித்து வருகிறார்!**

கடந்த 10 ஆண்டுகளாக தொழிற்சங்கங்கள் போராடி எந்த பலனையும் பெறவில்லை. இந்த பிரச்சினை அ.தி.மு.க ஆட்சியில் முடிந்திருக்க வேண்டும். ஆனால் போராடாமலேயே அனைத்து பலன்களும் தற்போது தொழிலாளருக்கு முதலமைச்சர் அவர்கள் வழங்கி வருகிறார்கள். தொழிற்சங்கங்கள் அ.தி.மு.க. ஆட்சியில் வைக்கப்பட்ட கோரிக்கைகள் எதுவும் கவனிக்கப்படாமல் இருந்த நிலையில் அதனை தி.மு.க. அரசு நிறைவேற்றி வருகிறது. நம் முதலமைச்சர் அவர்கள் கருணையோடு கவனித்து வருகிறார்.

மெட்ரிக்ஸ் முறையில் பின்பற்றி தொழிலாளர்களுக்கு ஊதியம் வழங்கப்பட்டுள்ளது. புதிதாக நியமிக்கப்பட்ட ஊழியர்களுக்கு 3000 ரூபாய் வரை கூடுதலாக சம்பளம் வழங்கப்பட்டுள்ளது. யாரும் போராடாமல் ஊதிய உயர்வை பேச்சுவார்த்தை மூலம் தீர்த்துள் ளோம். பணப்பலன்கள் படிப்படியாக நிதிநிலை பொறுத்து உடனடியாக வழங்கப் பட்டு வருகிறது.

கேரளா மாநிலத்தில் மாதம் தொடங்கி 30 நாளுக்கு பின்னர் தான் ஊதியம் வழங்கப்படுகிறது. ஆனால் தமிழகத்தில் மாதம் தொடங்கிய முதல் நாளில் ஊதியம் வழங்கப்படுகிறது. ஊதிய 1ம் தேதி வழங்கப்படுவதற்கு மகளிர் கட்டணமில்லா பயணத்திட்டமும் தான் காரணம். ஒரே கல்லில் 2 மாங்காயாக மகளிருக்கான கட்டணமில்லா பயணம் வழங்கி அதன் மூலம் கிடைக்கும் வருவாயில் எந்த பிரச்சினையும் இல்லாமல் போக்குவரத்துத் துறைக்கு முறையாக ஊதியமும் வழங்கப்படுகிறது.

தீபாவளி, பொங்கல் பண்டிகையின் போதும் கூட கண் துஞ்சாமல் பணி செய்து பேருந்தை தொழிலாளர் இயக்கி வந்தார்கள். நீண்ட ஆண்டுகளாக வழங்கப்படாமல் இருக்கும் பணப்பலன்களை வழங்குவதற்கு இத்தகைய விழாக்கள் எதற்கு என கேள்வி கேட்கிறார்கள். அரசால் கொடுக்கப்படக்கூடிய அனைத்து பணபலன்களும் அனைவருக்கும் தெரிய வேண்டும் என்பதே எங்களது நோக்கம். அதனாலேயே இது போன்ற விழாக்கள் நடத்தப்படுகிறது. ரூபாய் 111.95 கோடியில் பணப்பலன்கள் நெல்லையில் வழங்கப்பட்டுள்ளது.

பஞ்சப்படி உயர்த்த கோரிக்கை இருக்கிறது. அதுவும் பரிசீலனையில் உள்ளது.

மக்கள் பாதிக்காத வகையில், பிரச்சினைகள் வராத அளவுக்கு போக்குவரத்தை சிறப்பாக நடத்த வேண்டும் என்று முதலமைச்சர் அவர்கள் எங்களுக்கு உத்தரவிட்டுள்ளார்கள்.

இவ்வாறு அமைச்சர் எஸ்.எஸ்.சிவசங்கர் பேசினார்.

நிகழ்வில் சட்டமன்ற உறுப்பினர்கள் மு.அப்துல் வகாப்(பாளை) நயினார் நாகேந்திரன் (நெல்லை) மாவட்ட ஆட்சியர் கார்த்திகேயன், மாநகராட்சி மேயர் சரவணன், துணை மேயர் ராஜ், மாவட்ட ஊராட்சி மன்ற தலைவர் வி.எஸ். ஆர்.ஜெகதீஷ், மாவட்ட துணை செயலாளர்கள் தர்மன், சுரேஷ்,

தகவல் தொழில் நுட்ப அணி துணை அமைப்பாளர் காசிமணி, தொ.மு.ச நெல்சன், சிவன்பிள்ளை,

முருகன், மகாவிஷ்ணு உள்பட தொ.மு.ச நிர்வாகிகள், தொழிற்சங்க நிர்வாகிகள் போக்குவரத்து துறை ஓய்வு பெற்ற பணியாளர்கள் குடும்பத்தினர், போக்குவரத்து துறை அலுவலர்கள் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

நிகழ்ச்சி நிறைவில் நெல்லை முதன்மை நிதி அலுவலர் சங்கர் நன்றியுரையாற்றினார்.


**தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்**
**மின்னணு ஒப்பந்தப்புள்ளி அழைப்பு அறிவிப்பு**

| வ.எண் | ஒப்பந்தப்புள்ளி கோரும் அலுவலர் | ஒப்பந்த விவரக் குறிப்பீடு எண் | மொத்தம் |
|---|---|---|---|
| 1 | த.பொ./பொ.மேலாண்மை | M.12, M.13, M.14 | 3 |
| 2 | மே.பொ./சிவில்/கம்பம் உற்பத்தி மற்றும் ஒருங்கிணைப்பு | 01 | 1 |
| 3 | மே.பொ./எ.சு.திட்டங்கள் | OT-09, OT-10, OT-11, OT-12, OT-13 | 5 |
| 4 | த.பொ./புனல் | HE-2462 | 1 |
| 5 | மே.பொ./கொ&நி/வ.செ.அ.மி.நி–2 | 55 | 1 |
| 6 | மே.பொ./புனல் | HE-2463 | 1 |
| 7 | த.பொ./வ.செ.அ.மி.நி–1 | 01 | 1 |
| ஒப்பந்தப்புள்ளி கால நீட்டிப்பு அறிவிப்பு | | | |
| 1 | மே.பொ/கொ&நி/தூ.அ.மி.நி | TTPS 3181-S, 3250- S | 2 |

மின்னணு (e-tender) ஒப்பந்தப்புள்ளிகளின் பணி / பொருட்கள் சமர்ப்பிக்கும், திறக்கப்படும் கடைசி நாள் மற்றும் இணையதளத்தில் காண பதிவிறக்கம் செய்யும் நாள் / நேரம் போன்ற முழு விவரங்களுக்கு கீழ்க்கண்ட இணையதளங்களை காணவும்:
www.tangedco.gov.in, www.tntenders.gov.in/nicgep/app, www.tenders.tn.gov.in

“சோதனை கடந்து சுதந்திரம் அடைந்தோம், சாதனை புரிந்து சரித்திரம் படைப்போம்.”

செ.ம.தொ.இ/2895/ஒப்பந்தப்புள்ளி/2023